விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 072 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 17 சனிக்கிழமை (01.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தமிழ் அரசியல் கைதிகளை எப்போது விடுதலை செய்வீர்கள்

### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை எப்போது விடுதலை செய்வீர்கள் என சிறீதரன் எம்.பி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நான்கு விடயங்களை முன்வைத்து நீதியமைச்சரிடம் தமிழ் அரசியல் கைதிகளின் விவ

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் 40க்கும் மேற்பட்ட எலும்பு மாதிரிகள் மீட்பு

### புதைகுழி தொடர்பில் அறிய ஸ்கான் மூலம் ஆய்வு செய்யத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இதுவரை 40க்கும் மேற்பட்ட எலும்பு மாதிரிகள் பெறப்பட்டதாகவும்ஏனைய புதைகுழிகள் தொடர்பில் ஆராய ஸ்கான் மூலம் ஆய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக் கிழக்கு மாகாணங்களில்

# இராணுவ முகாம்களை மூடுவதற்கு நடவடிக்கை

### காணிகளும் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும்
### பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேலதிகமான இராணுவ முகாம்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இராணுவம் வசமுள்ள பொதுமக்கள் காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர தெரிவித்தார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## எரிபொருள் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் விலைத் திருத்தத்துக்கு அமைய மார்ச் மாதத்துக்கான எரிபொருள் திருத்தத்

15ஆம் பக்கம் பார்க்க

மார்ச் 14, 15ஆம் திகதிகளில்

## கச்சதீவு திருவிழா

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா இம்மாதம் 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

3ஆம் திகதிவரை

## வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 3ஆம் திகதி வரை வடக்கில் மழை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றுச் சுழற்சி இலங்கைக்குத் தென் கிழக்குத் திசையில் காணப்படுகின்றது.

· இதுமேலும் மேற்குத் திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்க

### மாத்தறை நீதிமன்றம் உத்தரவு



(மாத்தறை)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட ஆறு சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறு மாத்தறை நீதவான்நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள W 15 உணவகத்துக்கு முன்னால் நடந்த துப்

15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய அரசு தயார்

### பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தயார் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை

15ஆம் பக்கம் பார்க்க

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர்

## யாழ்.போதனா வைத்தியசாலையில் 2ஆவது நாளாக எதிர்ப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்துக்கு எதிராக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கை நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இவர்களின் தொழிற்சங்க நடவடிக்கையால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை முகங்கொடுக்க நேரிட்டது.

எனினும் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



மலர்வு 28 - 04 - 1950

உதிர்வு 27 - 02 - 2025

## திருமதி மல்லிகாதேவி விநாயகமூர்த்தி

மீசாலை புத்தூர் சந்தியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி விநாயகமூர்த்தி அவர்கள் (27.02.2025) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (தம்புநாதர்) - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் விநாயகமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மௌலீஸ்வரன், பரமேஸ்வரன், இரத்தினதேவி, நாகேஸ்வரன் மற்றும் கேதீஸ்வரன், பாக்கியமங்கை, இளஞ்சிங்கநாதன், வசந்தாதேவி, தெய்வேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் யுகானந்தன், கயல்விழி, காலஞ்சென்றவர்களான மலர்விழி, துவாரகை மற்றும் சதானந்தன், வதனி (ஆசிரியர்), குகானந்தன், ரதிகரன், கீர்த்தீசன், அருள்சோதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை மீசாலை மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்
சதா(மகன்) - 077 638 8996

(C-2351)


# தேவை

- யாழ். நகரிலுள்ள வீட்டில் வயோதிபரை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
- யாழ். நகரிலுள்ள வீட்டை சுத்திகரிப்பதற்கு சுத்திகரிப்பாளர் தேவை. (ஆண்/ பெண்)

தொடர்புகளுக்கு :
077 623 7416

(3543)

புதிய வாகன வருகையை முன்னிட்டு வடமாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி....

உங்களிடம் பாவனையிலுள்ள மோட்டார் கார்/ வாகனங்களை தகுந்த விலைப்படி விற்கவும் மற்றும் புதிய வாகனங்களை மிகச் சிறந்த விலையில் கொள்வனவு செய்யவும் உங்களுக்கு ஓர் சிறந்த வாய்ப்பு....

மேலதிக தகவல்களுக்கு :
076 693 2227, 077 623 7416

(3543)


யா/ மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை
J/ Mahajana College - Tellippalai

## இல்ல மெய்வல்லுனர் போட்டி பிற்போடுதல்

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 01.03.2025, 02.03.2025 தினங்களில் நடைபெறவிருந்த இடைநிலைப்பிரிவு மற்றும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மெய்வல்லுனர்போட்டிகள் 05.03.2025, 06.03.2025 தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளன.

அதிபர்,
யா/ மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை.

(C-2349)

காரைநகரில்

## கிணற்றுக்குள் விழுந்த சிறுவன் மரணம்

காரைநகர் களபூமியில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த 9 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மாணவனான தவரூபன் சௌமியன் (வயது 9) என்ற மாணவனே உயிரிழந்தவனாவான்.


நேற்று பாடசாலை முடிந்து தனது அம்மம்மாவின் வீட்டில இருந்த போது பாதுகாப்பற்ற கிணற்றிற்கு அருகில் சென்ற போது தவறி விழுந்து உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



மலர்வு 1949.09.13

உதிர்வு 2025.02.28

## கந்தையா [பத்தர்] பாலபரமேஸ்வரன் [ராசுப் பத்தர்]

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா(பத்தர்) பாலபரமேஸ்வரன் அவர்கள் நேற்று (2025.02.28) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா(பத்தர்) - சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி(பத்தர்) - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும் யுசெந்தி, நிஷாந்தஜி(சுவிஸ்), ஸ்ரீரோகினி(கொலண்ட்), வினோஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன், நிரோஜா, மிதுர்ஷன், விஜயமோகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான துரைராஜேஸ்வரன், பாலசரஸ்வதி, பாலசுந்தரம் மற்றும் பாலபரமேஸ்வரி, துரைராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிரிஷாந், தேஜாஸ்ரீ, நிஹானா, நித்தாரி, நித்தாரா, ரிஷிகாந், ஆதர்ஸ், டிலான், டயானா, மீரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (2025.03.02) ஞாயிற்றுக்கிழமை 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வேம்பன் வீதி,
ஓங்கார் லேன்,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்

(3542)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்!

## • என்கிறார் நீதி அமைச்சர் ஹர்ஷன •

**(கொழும்பு)**

**வெகு விரைவில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும், தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என அநுர தரப்பு அறிவித்துள்ளது.**



குறித்த விடயத்தை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விடயதானத்துக்குப் பொறுப்பற்ற வகையில் பேசுகின்றார்கள். விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கிறார்கள்.

இருப்பினும் ஒரு சிலர் பொறுப்புடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது. தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங்கள் மறக்கவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று அன்றும் குறிப்பிட்டோம். அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக கொண்டு வந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஆகிய வற்றை மீளாய்வு செய்வதற்காக நீதியரசர் (ஓய்வுநிலை) ஹர்ஷ குலரத்ன தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நடவடிக்கைகள் அடுத்த தேர்தல் வரை இழுத்துச் செல்லப்படமாட்டாது. பூகோளப் பயங்கரவாதம் மற்றும் பூகோள நவீன சவால்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சட்டம் விரைவில் இயற்றப்படும்.

உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் கோட்பாடுகளுக்கு அமைவாகவே புதிய சட்டம் இயற்றப்படும்.

ஆகவே இந்தச் சட்டம் இயற்றப்பட்டவுடன் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும். இந்த விடயத்தில் எவரும் அச்சம் கொள்ள வேண்டாம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-8)

# குற்றவியல் நீதி தொடர்பில் வாய் திறக்காத அமைச்சர்

## சபையில் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் எம்.பி



(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகம் வலுப்படுத்தப்படும் என்றும் போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஜெனிவாவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை. மாற்றம் என்று கூறிக் கொண்டு வந்த இந்த அரசும் பழைய எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த பாராளுமன்றத்தில் இதே தலைப்பின் கீழ் விவாதத்தில் கலந்து கொண்டிருந்த போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதன் நம்பகத்தன்மை தொடர்பில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் சில உறுப்பினர்கள் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்திருந்த போது காணாமற்போனோரின் உறவினர்களையும் சந்தித்ததுடன், கொழும்புக்கு வந்ததும் அது தொடர்பில் அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில் இருந்த விடயங்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை.


வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ளார்.

அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவதாகக் கூறியுள்ளார். போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், குற்றவியல் நீதி தொடர்பில் ஒரு வார்த்தையையும் அவர் கூறவில்லை.

யுத்த சம்பவத்தில் குற்றவியல் தொடர்பான நீதி மிகவும் முக்கியமானது. மனிதப் படுகொலைகளைச் செய்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதைத் தவிர அனைத்தையும் கூறியுள்ளார்.

இது மிகவும் கவலைக்குரிய விடயமே. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இதனையே செய்தார். முறைமை மாற்றம் என்று கூறிக்கொண்டு வந்த நீங்களும் முன்னைய அரசுகளின் எண்ணப்பாடுகளையே கொண்டுள்ளீர்கள் என அவர் தெரிவித்தார். (நி-8)

# சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி



(வோஷிங்டன்)

உலகப் பொருளாதார வளர்ச்சியின் நிச்சயமற்ற தன்மை, வோஷிங்டனின் கட்டண அச்சுறுத்தல்களின் எரிபொருள் தேவை மற்றும் அமெரிக்கப் பொருளாதார மந்த நிலையின் அறிகுறிகள் ஆகியவை விநியோக தேவைகளை விட அதிகமாக இருப்பதால், நேற்று வெள்ளிக்கிழமை எண்ணெய் விலைகள் குறைந்தன.

அதன்படி, மிகவும் வினைத்திறனான ப்ரெண்ட் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு 31 செண்ட்கள் அல்லது 0.4% சரிந்து 73.26 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

அதேநேரத்தில், அமெரிக்க வெஸ்ட் டெக்சாஸ் இன்டர் மீடியட் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு 31 சென்ட்கள் அல்லது 0.4% குறைந்து 70.04 அமெரிக்க டொலர்களாகப் பதிவானது.

கடந்த 2024 நவம்பர் மாதத்தின் பின்னர் எரிபொருள் விலை இவ்வாறு வீழ்ச்சியடைந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அமெரிக்காவில் பொருளாதார மந்தநிலை அச்சங்கள், கட்டணங்கள், ஏப்ரல் மாதத்தில் விநியோகத்தை அதிகரிக்கும் OPEC+ திட்டங்கள் மற்றும் உக்ரைன் போரின் அமைதிக்கான நம்பிக்கைகள் உள்ளிட்ட காரணிகள் எரிபொருள் விலை குறைப்புக்கு வழி வகுக்கின்றது என சர்வதேச எண்ணெய் சந்தை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வெனிசுலா, ஈரான் மற்றும் ரஷ்யா மீதான புதிய அமெரிக்கத் தடைகள் காரணமாக அதன் உறுப்பினர்கள் உலகளாவிய விநியோகம் தொடர்பான நிச்சயமற்ற தன்மையுடன் போராடுவதால், ஏப்ரல் மாதத்தில் எண்ணெய் உற்பத்தியை உயர்த்தலாமா அல்லது அதை முடக்கலாமா என்று Opec+ விவாதித்து வருவதாக எட்டு Opec+ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி அணி ஆலோசகராக கெவின் பீட்டர்சன் நியமனம்



டில்லி கேபிடல்ஸ் அணியின் ஆலோசகராக இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் கெவின் பீட்டர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஐ.பி.எல் தொடர் எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி தொடங்கவுள்ளது. தொடரின் முதல் போட்டியில் நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரை எதிர்த்து விளையாடுகிறது.


ஐ.பி.எல் தொடருக்காக அனைத்து அணிகளும் தங்களது பயிற்சியை விரைவில் தொடங்கவுள்ளனர். அணி நிர்வாகங்கள் தங்களது அணிகளுக்கான பயிற்சியாளர்கள் மற்றும் உதவிப் பயிற்சியாளர்களை நியமிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

44 வயதாகும் கெவின் பீட்டர்சன் கடந்த 2014 ஆம் ஆண்டு டில்லி அணியின் கப்டனாக செயற்பட்டுள்ளார். ஐபிஎல் தொடரில் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ஒரு வீரராக இடம்பெற்று விளையாடிய கெவின் பீட்டர்சன், முதல் முறையாக பயிற்சியளிக்கும் பொறுப்பில் ஈடுபடவுள்ளார். டில்லி அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது குறித்து கெவின் பீட்டர்சன் எக்ஸ்தளத்தில் பதிவிட்டிருப்பதாவது. டில்லி அணியில் மீண்டும் இணையவுள்ளதை நினைத்து மிகவும் உற்சாகமாக இருக்கிறேன். டில்லியுடன் எனக்கு நிறைய அருமையான நினைவுகள் இருக்கின்றன. ஐ.பி.எல் தொடரில் முதல் கோப்பைக்கான தேடலில் இருக்கும் டில்லி கேபிடல்ஸ் அணிக்கு என்னால் முடிந்த அளவுக்கு உதவியாக இருப்பேன் எனப் பதிவிட்டுள்ளார்.

அண்மையில் டில்லி கேபிடல்ஸ் அணியின் உதவிப் பயிற்சியாளராக முன்னாள் இங்கிலாந்து பயிற்சியாளர் மேத்யூ மோட் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (6-8)

# இந்தியா தனது கடைசி லீக் போட்டியில் நியூஸிலாந்துடன் மோதல்

## ரோஹித் விளையாடுவது சந்தேகம்?



ஐசிசி சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி லீக் சுற்றில் பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளை வீழ்த்தி அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுவிட்டது.

இந்நிலையில் இந்திய அணி தனது கடைசி லீக் போட்டியில் நியூஸிலாந்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை டுபாயில் மோத உள்ளது. பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்துக்கு பிறகு 2 நாட்கள் ஓய்வில் இருந்த இந்திய அணி வீரர்கள் நேற்று பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதில் கப்டன் ரோஹித் சர்மா பங்கேற்கவில்லை. பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின் போது ரோஹித் சர்மாவுக்கு தொடை பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது.

இதனால் பட்டிங் பயிற்சியில் ஈடுபடாத அவர், மனவலிமைக்கான பயிற்சி மற்றும் பிசியோதெரபி எடுத்துக் கொண்டார்.


அநேகமாக நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் ரோஹித் சர்மா களமிறங்குவது சந்தேகம் என்றே அணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (6-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3304

அனிஸ்ரா




கிருஷிகா




எழிலினி




பிருந்தா




இந்துஜா




சுஸ்மிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சா/த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் பங்குனி மாதம் 17 ஆம் திகதி தொடங்கி 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபருக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தனியார் விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் பங்குனி மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பாக பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.doenets.lk ஐப் பார்வையிட்டு அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்யும் வசதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், பாடம், மொழி மற்றும் பெயரில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்தால், மார்ச் 10 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை https://onlineexams.gov.lk/eic என்ற இணையத் தளத்தைப் பார்வையிட்டு ஒன்லைனில் பதிவு செய்ய வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

# ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுதியானது முறையே 291.19 ரூபாவாகவும் 299.73 ரூபாவாகவும் உள்ளது. நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுதியானது முறையே 291.40 ரூபாவாகவும் 299.98 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு உட்பட ஏனைய பிரதான நாடுகளின் நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று உயர்ந்துள்ளது. (நி-8)

# மழையுடனான வானிலையால் மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தில் பசறை, ஹாலிஎல, பதுளை, கந்தகெட்டிய, ஊவ பரணகம, மீகஹகிவுல மற்றும் சொரணாதொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளும் நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளும் அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு இன்று வரை அமுலில் இருக்கும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-8)


31 ஆம் துயர் நிறைந்த நாள் நினைவலைகள்..!



மலர்வு
குருவீதி,
காங்கேசன்
துறை
14.11.1985

உதிர்வு
ஜேர்மனி
(Hannover
Garbsen)
30.01.2025

அமரர். சித்துராங்கி அன்ரனி (சிந்து)

உயிர் சொந்தம் ஒன்று
பறிபோய் மாதம் ஒன்று
செழித்திடும் அன்பைக் காட்டி
பாதியிலே சென்று விட்டாள்
பழிகளைச் சுமக்கும் தெய்வம்
பதறியும் காக்கவில்லை
விரைவாக அழைத்துக் கொண்டான்
விதியெனப் புலம்ப வைத்து
வழிகளும் ஏதுமுண்டோ
வையகம் மீண்டும் காண
உம் பாசத்தை கண்ணீரில் கரைக்கிறோம்
மீள வழியின்றி மீண்டும் பிறக்க கேட்கிறோம்.

மண்விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கி
சென்றாலும் எம் நினைவெனும் தீபத்தில்
நித்தமும் ஒளிர்வீர்கள் நீங்கள் விட்டுச்சென்ற
உம் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(3532)

குரு வீதி, காங்கேசன்துறை.
077 042 4024

உம் நினைவில் வாடும் : குடும்பத்தினர்
சித்தப்பா, சித்தி, சகோதரர்கள்
(ரமணன், ஜெனனி, கௌதம் ஹம்சா, பவித்திரா)


# இராசிபலன்

01.03.2025
மாசி 17, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 3.20 மணிவரை

பூரட்டாதி முற்பகல் 1.48 மணிவரை
சுபநேரம் 3.28-4.58 மணிவரை
இராகுகாலம் 9.28-10.58 மணிவரை

சந்திராஷ்டமம் - மகம், பூரம்

வளவன்

**மேஷம்** – தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** – மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வாகன சுகமுண்டு, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**மிதுனம்** – பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**கடகம்** – மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்** – வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், கௌரவக் குறைவான நாள்.

**கன்னி** – சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** – தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு** – நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மகரம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

**கும்பம்** – கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** – பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

துன்பத்தை வெளியில் சொன்னால் சிறிது குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியல் ஆய்வரங்கு இன்று நல்லை ஆதீனத்தில்


(யாழ்ப்பாணம்)

தமிழியல் ஆய்வு நடுவகம் நல்லூர்ப் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் "தமிழ் இலக்கண மரபின் செல்நெறி" என்னும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சைவப்புலவர் கு.றஜீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுகன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் தொடக்கவுரையை நிகழ்த்தவுள்ளார்.

ஆய்வரங்க உரைகளை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர்களான அ.சண்முகதாஸ், செ.சிவசுப்பிரமணியம், கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா (ஓய்வு நிலை பேராசிரியர்), ஜப்பான் டோக்கியோ கக்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் ச.மனோன்மணி, தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.ரகுபரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். அத்துடன் கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வு நிலை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. ரூபி. வலன்ரினா பிரான்சிஸ் தொகுப்புரையை நிகழ்த்தவுள்ளார். (6-8)

# கைத்தொழில் பேட்டையின் தேவைப்பாடுகள் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று முன்தினம் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டார்.

கைத்தொழில்பேட்டையில் இயங்கும் தொழிற்சாலைகளையும் சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள தேவைப்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். நீர் விநியோகம் இன்மை மற்றும் முன்னறிவித்தல் இல்லாத மின்தடை காரணமாகப் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

அதேநேரம் சில தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இயக்குபவர்களைப் பழக்குவதற்கு இந்தியாவிலிருந்தே ஆட்களை வரவழைக்க வேண்டியிருப்பதாகவும் ஆனால் அதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதில் தாமதம் நிலவுவதாகவும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கும் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் வருவதற்கு ஏதுவாக பேருந்து சேவையை ஒழுங்குபடுத்தித் தருமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதேவேளை அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு ஏதுவாக பல இடங்கள் உள்ளன என்பதையும் கவனத்திலெடுத்த ஆளுநர் உள்ளக வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்குமாறும் பணித்தார்.

ஆளுநரின் இந்தக் கண்காணிப்பு பயணத்தின்போது வலி.கிழக்கு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவகொங்கதரன் ஆகியோர் இணைந்திருந்தனர். (6-8)

# பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திருமதி. சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (நி-8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மஹோற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாசி மகத் தீர்த்தமும் நடைபெற்று 13 ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையும் என ஆலய பரிபாலன சபையின் செயலாளர் இ.கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார். (6-8)

# கிழவன்காடு கலாமன்ற ஸ்தாபக தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர்-யாழ்.கிளை கிழவன் காடு கலாமன்றம் நடத்தும் ஸ்தாபக தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கிழவன்காடு கலாமன்ற ஸ்தாபகரும் தலைவருமான ந.சோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கௌரவ விருந்தினராக கிழவன்காடு கலாமன்ற உறுப்பினர் திரு. திருமதி. சிவஞானம் உமாதேவி தம்பதியினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கிழவன்காடு கலாமன்றம் வழங்கும் "சிதம்பர ஜோதி" உயர்விருது ஈழத்தின் முதுபெரும் நடனக்கலைஞர் ஸ்ரீமதி.சாந்தினி சிவனேசனுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-8)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கண்ணகை அம்பாள் மாதர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் தெற்கு, முனி கோவிலடிப் பொது நோக்கு மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி. திலகராணி சர்வானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-8)

# சம்பியனானது யாழ்.மாவட்ட செயலக அணி



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான. நாட்டிற்கு குறுக்கான ஓட்டத்தில் யாழ் மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் வடமாகாணத்தில் உள்ள மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான நாட்டிற்கு குறுக்கான ஓட்டம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டியில் யாழ் மாவட்ட செயலக அணிசம்பியன் கிண்ணத்தையும் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்ட செயலக அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# எள்ளங்குளத்தில் சாந்தனுக்கு துயிலாலயம் திறந்து வைப்பு





(யாழ்ப்பாணம்)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்த சாந்தன் உயிரிழந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட மயானத்தில் அன்னாரின் துயிலுமில்லம் அவரது தயாரினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி உயிரிழந்தார்.

இந்நிலையில் சாந்தனின் உடல் அடக்கம் செய்யப்பட்ட வடமராட்சி எள்ளங்குளம் மயானத்தில் அவரது குடும்பத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட துயிலாலயம் பொதுமக்கள் அஞ்சலிக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (6-8-33)

# மூளாயில் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண தந்தை செல்வா நற்பணிமன்றத்தினால் வருடாந்தம் தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் இலவச கண் பரிசோதனை முகாம் மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் சி.மயூரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இந்து இளைஞர்மன்ற பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச சபை செயலாளர் ச.பாலரூபன், சிறப்பு விருந்தினராக முருகையா சாரதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை மன்றத்தலைவர் உமாபதி, மன்றபொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்கள் மூலம் 17,000 வன்முறைச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

கடந்த வருடம் சமூக ஊடகங்கள் மூலமாக 17,000 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை சேர்ட் நிறுவனத்தின் பொறியியலாளர் சாருக்க தமுனு பொல, வயது வந்தவர்களுக்கு நிகழ்நிலை மூலம் 1,371 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சிறுவர் தொடர்பான வன்முறை சம்பவங்கள் 60 பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்கள் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது.

16 உயிர்மாய்ப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் நிகழ்நிலைப் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான தேவையை வலியுறுத்துகிறது.

இதேவேளை, மொத்தம் 6,123 சமூக ஊடகக் கணக்குகள் ஹக் செய்யப்பட்டுள்ளன.

இது தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்புக் குறித்த தீவிர கவலைகளை எழுப்பியுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

# காலணிகளுக்கான வவுச்சர் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு காலணிகள் வழங்குவதற்கான வவுச்சர் சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், காலணிகளுக்கான வவுச்சர் சீட்டுகள் செல்லுபடியாகும் காலம் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.



இதேவேளை காலணிகளுக்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலத்தை மார்ச் மாதம் 20 திகதி வரை நீடித்துள்ளதாக குறிப்பிட்டு கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (நி-8)

# தொடரும் தமிழக மீனவர்களின் உண்ணாவிரதப் போராட்டம்

(சென்னை)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தித் தங்கச்சி மடத்தில் மீனவர்கள் தொடர் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது



செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாகப் படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்திப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்திய இலங்கை மீனவர் பேச்சு வார்த்தையைத் துரிதப்படுத்தி உடனடியாக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

படகையும் மீனவர்களையும் விடுதலை செய்வதாக மத்திய அரசு உறுதியளித்தால் மட்டுமே இந்தப் போராட்டம் கைவிடப்படும் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஐந்து நாட்களாகத் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் மீனவர்கள் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8)


PEOPLE'S BANK Pride of the Nation

## கேள்விப்பத்திர அறிவித்தல் மக்கள் வங்கி

### சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/பல்கலைக் கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி, ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ்/ பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 5000/= ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2025 பங்குனி 19 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9.00 – பி.ப.4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2025 பங்குனி 20 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-2345)

Fax : 021-222 2602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-222 2601/ 021-222 8602



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BSc(Software Engineering),Printing<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/15173 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: College,Teacher<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14672 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்:5' 8" 1 இல் செவ்<br>தகைமை/தொழில் : Civil Engineering,Bank Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15174 | பிறப்பு-1996-RC<br>நட்சத்திரம்-அச்சுவினி சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு/அரச தொழில்<br>தொ.இ: G/14039 |
| பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:A/L,Business<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்,விவாகரத்தானவர்<br>தொ.இ: B/15175 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2 இல் செவ்<br>உயரம்:5' 1"<br>தகைமை/தொழில்:A/L,<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14676 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இங்கிலாந்துக்கு வருமாறு ட்ரம்பிற்கு அழைப்பு



(லண்டன்)

இங்கிலாந்துப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை நேற்று சந்தித்தார்.

இங்கிலாந்து மன்னர் சார்லஸ் சார்பாக ஜனாதிபதி ட்ரம்பிற்கு அரசு முறைப் பயணத்துக்கு அழைப்பு விடுத்தார்.

இங்கிலாந்துப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இங்கிலாந்துப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை நேற்று சந்தித்தார்.

அப்போது, இங்கிலாந்து மன்னர் சார்லஸ் சார்பாக ஜனாதிபதி ட்ரம்பிற்கு அரசு முறைப் பயணத்துக்காக அழைப்பு விடுத்தார். கெய்ர் ஸ்டார்மரின் இந்த அழைப்பினை ட்ரம்ப் ஏற்றுக்கொண்டார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் உக்ரைனுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்து வரும் நிலையில் உக்ரைனுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என ஜனாதிபதி ட்ரம்பிடம் இங்கிலாந்துப் பிரதமர் ஸ்டார்மர் அழுத்தம் கொடுப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-8)

# அடுத்த கட்ட பே... பேச்சுவார்த்தை...

## அறிவித்தது ஹமாஸ் அமைப்பு



**(ஜெருசலேம்)**

**பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான அடுத்த கட்டப் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.**

பணயக் கைதிகளை விடுவிக்க பேச்சுவார்த்தை மற்றும் ஒப்பந்தத்தை கடைப்பிடிப்பது மட்டுமே இஸ்ரேலுக்கு உள்ள ஒரேவழி என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி திடீரென இஸ்ரேல் நாட்டிற்குள் புகுந்து அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

இதில் 1200 இற்கும் மேற்பட்டவர்களை கொன்று குவித்தனர். அத்தோடு 250 இற்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றனர்.

இதனால் கோபம் அடைந்த இஸ்ரேல் ஹமாஸ்க்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்து, காசா மீது பயங்கரத் தாக்குதல் நடத்தியது. 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பணயக் கைதிகளை விடுவிக்க இடைக்காலப் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அப்போது 100 இற்கும் மேற்பட்ட பயணக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. இதற்குப் பதிலாக இஸ்ரேல், சிறையில் உள்ள பாலஸ்தீனர்கள் பலரை விடுவித்தது.

இடைக்காலப் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவடைவதற்குள், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பினர் மீறியதாக இஸ்ரேல் குற்றம்சாட்டி மீண்டும் காசா மீது தாக்குதல் நடத்தியது.


இந்தத் தாக்குதல் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வரை தொடர்ந்தது. இதில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த மாதம் ஜனவரி 20 ஆம் திகதி பதவி ஏற்க இருந்த நிலையில் அதற்கு முந்தைய நாள் அமெரிக்கா, எகிப்து உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தராக செயற்பட்டு இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்தனர்.

இந்தப் போர் நிறுத்தம் 6 வாரம் ஆகும். இந்த 6 வாரத்தில் 33 பணயக் கைதிகள் (இதில் உயிரிழந்த 8 பேரின் உடல்கள் அடங்

# பனிமலையில் மோதிய பிரித்தானிய விமானம்

## 3 பேர் படுகாயம்



(லண்டன்)

பிரித்தானியாவின் மான்செஸ்டர் நகரில் இருந்து பயணித்த விமானம் வெர்மான்ட் என்ற இடத்துக்கு அருகே சென்றபோது விபத்துக்குள்ளாகியது.

குறித்த சிறிய ரக விமானம் அங்குள்ள ஈக்வினாக்ஸ் எனும் பனிமலையில் மோதி கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் விமானி உட்பட 3 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்து தொடர்பாக தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புப் படையினர் விமானத்தில் படுகாயம் அடைந்திருந்த மூவரையும் உடனடியாக மீட்டு மருத்துவமனையில் அனுமதித்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# அமெரிக்காவுக்குள் நுழை...

## சீனக் கப்பல்களுக்கு 1.5 மில்லியன் ...

(வோஷிங்டன்)

அமெரிக்கத் துறைமுகங்களுக்குள் நுழையும் சீனக் கப்பல்கள் மற்றும் சீனத் தயாரிப்புக் கப்பல்களுக்கு 1.5 மில்லியன் டொலர்கள் வரை வரி விதிக்க அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் முன்மொழிந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகளாவிய கப்பல் கட்டுதல், கடல்சார் மற்றும் தளபாடத் துறைகளில் சீனாவின் வளர்ந்து வரும் ஆதிக்கம் குறித்த கவலைகளின் ஒரு பகுதியாக அமெரிக்கா இதைச் செயற்படுத்தத் தயாராகி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடனின் நிர்வாகத்தின் போது கடந்த ஜனவரி 16 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் அறிக்கையில் சர்வதேச அளவில் போட்டியிடும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் பாரிய மானியங்கள் மற்றும்



ஆதரவு காரணமாக உலகளாவிய கப்பல் கட்டுமானத்தில் சீனாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...போர் நிறுத்தம்;
# ...தைக்கு தயார்!



(கும்) விடுவிக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க வேண்டும் என ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் இறுதிக்கட்டமாக நான்கு பணயக் கைதிகளின் உடல்களை ஹமாஸ் ஒப்படைத்துள்ளது.

இதற்குப் பதிலாக இஸ்ரேல் சிறையில் உள்ள 600 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவிக்கவேண்டும்.

இந்த வார இறுதியுடன் முதற்கட்டப் போர் நிறுத்தம் முடிவுக்கு வருகிறது. அடுத்த கட்டத்திற்கான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கப்படவில்லை.

இதனால் போர் நிறுத்தம் தொடருமா? அல்லது இஸ்ரேல் காசா மீது மீண்டும் தாக்குதல் நடத்துமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயார் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஹமாஸ் கூறுகையில்,

"பேச்சுவார்த்தை மற்றும் ஒப்பந்தத்தை கடைபிடிப்பது மட்டுமே இஸ்ரேல் பணயக் கைதிகளைப் பாதுகாப்பாக மீட்பதற்கான ஒரே வழி. மாறாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீற முயற்சி மேற்கொண்டால், அது பணயக் கைதிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் துன்பத்திற்கு மட்டுமே வழி வகுக்கும்" எனத் தெரிவித்துள்ளது. (நி-8)

## இணைய மோசடியில் ஈடுபட்ட 7000 பேர் நாடு கடத்தல்

### மியன்மார் அதிரடி



(பர்மா)

தாய்லாந்து - மியன்மார் எல்லையில் இணைய மோசடியில் ஈடுபட்ட சுமார் 7,000 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு சொந்த நாடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட உள்ளனர்.

இணையவழிபண மோசடி உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இணைய மோசடி அமைப்பினால் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு இருப்பதாகக் கூறி இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு இணைய மோசடி செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் தாய்லாந்து - மியன்மார் எல்லையில் இணைய மோசடியில் ஈடுபட்ட சுமார் 7,000 பேர் சிக்கியுள்ளனர்.

தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா இம்மாதம் பெய்ஜிங்கிற்குச் சென்று சீன பிரதமர் ஜி ஜின்பிங்கை சந்தித்துப் பேசினார். இணைய மோசடியில் ஈடுபடும் அமைப்புகளுக்கு எதிராக தாய்லாந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

அதன்படி தாய்லாந்து, மியன்மார், சீனா ஆகிய நாடுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கையில் ஒன்லைன் மோசடி மையங்களில் பணிபுரிந்த 7,000 பேர் பிடிபட்டுள்ளனர்.

மியன்மார், கம்போடியா, லாவோஸில் உள்ள மோசடி மையங்களில் வேலை செய்த இவர்கள், காதலித்து ஏமாற்றி பணம் பறிப்பது, சட்டவிரோத சூதாட்டம் என பல வழிகளில் உலகம் முழுவதும் உள்ள மக்களிடம் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் வலையில் பெரும்பாலானோர் சிக்கிக் கொண்டு பணத்தை இழந்துள்ளனர்.

ஒன்லைன் மோசடிக்கு எதிரான தாய்லாந்தின் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மோசடி மையங்களை நடத்தும் மியன்மாரின் பல பகுதிகளுக்கு முதலில் மின்சாரம், இணையம், எரிவாயு விநியோகம் என்பன துண்டிக்கப்பட்டுள்ளன. பின்னர் இந்தப் பணிகளில் ஈடுபட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 7,000 பேர் மீட்கப்பட்டுள்ளனர். (நி-8)

## ...நுழையும்
### ...யன் டொலர் வரி



பங்கு 1999 ஆம் ஆண்டில் ஐந்து சத வீதத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஆனால் 1975 ஆம் ஆண்டில் அமெரிக்க கப்பல் கட்டும் தளங்கள் 70 கப்பல்களைக் கட்டியிருந்தாலும் இன்று அவை ஆண்டுதோறும் ஐந்து கப்பல்களை மட்டுமே கட்டுகின்றன.

இருப்பினும் முன்மொழியப்பட்ட அமெரிக்க சீர்திருத்தங்களில் சீனா ஓஷன் ஷிப்பிங் கம்பெனி போன்ற சீன கப்பல் நிறுவனங்களுக்குச் சொந்தமான ஒரு கப்பலுக்கு 1 மில்லியன் டொலர் வரை துறைமுக அணுகல் கட்டணம் அடங்கும்.

மாற்றாக ஒரு கப்பலின் சரக்கு திறனின் நிகர தொன்னுக்கு அமெரிக்கா 1,000 அமெரிக்க டொலர்களை வசூலிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## நேபாளத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.1 ஆக பதிவானதால் அச்சம்

(காத்மாண்டு)

நேபாளத்தின் காத்மாண்டு அருகே நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 6.1 ஆக பதிவாகி உள்ளது.

நிலநடுக்கம் காரணமாக மக்கள் அச்சமுற்றனர். எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் அல்லது உயிரிழப்புக் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

காத்மாண்டுவிலிருந்து 65 கி.மீ கிழக்கே உள்ள சிந்துபால்சௌக் மாவட்டத்தில் உள்ள கோடாரி நெடுஞ்சாலையில் அதிகாலை 2.51 மணிக்கு ரிக்டர் அளவுகோலில் 6.1 அளவிலான நிலநடுக்கம் பதிவானதாக தேசிய நிலநடுக்கக் கண் காணிப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

காத்மாண்டு பள்ளத்தாக்கு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலநடுக்கம் உணரப்பட்டது. நேபாளம் மிகவும் சுறுசுறுப்பான டெக்டோனிக் மண்டலங்களில் ஒன்றில் அமைந்துள்ளது.

இதனால் அந்நாடு அடிக்கடி பூகம்பங்களால் மிகவும்



பாதிக்கப்படுகிறது.


நேபாளத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு மிக மோசமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டரில் 7.8 ஆக பதிவான நிலநடுக்கம் காரணமாக 9 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

மேலும் பத்து லட்சத்திற்கும் அதிகமான கட்டமைப்புகளைச் சேதப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே மாதத்தின் பின்

## தேங்காய் விலையில் மாற்றம்



(கொழும்பு)

எதிர்வரும் மே மாதத்தின் பின்னர் தேங்காய் விலையில் மாற்றம் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தேங்காய் மற்றும் தேங்காய் சார் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் சில நாட்களில் ஆரம்பமாகுமென்று தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 200 மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்ய முடியுமென தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

அறுவடை வீழ்ச்சியால் ஏற்படும் பற்றாக்குறையை நிரப்ப தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால்மா மற்றும் தேங்காய்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் தேங்காய் விலை அதிகரிப்பு என்பது தற்போது பாரிய சிக்கலை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளதுடன் தேங்காய் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தையும் அதிகம் பாதித்துள்ளது.

இவ்வாறு, தொடர்ந்து தேங்காய் விலை அதிகரிப்பதனால் வியாபார நடவடிக்கைகள் வழமைக்கு மாறாக பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக தேங்காய் வியாபாரிகள் தொடர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 150-200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 165 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1300 | 1100- 1300 |
| தக்காளி | 100 | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 250-300 |
| கோவா | 300 | 300 | 300 | 300 |
| கரட் | 850 | 900 | 800 | 800 |
| பூசணி | 120 | 140 | 150 | 80-100 |
| புடோல் | 150 | 200 | 150 | 180-200 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 155 |
| பாகற்காய் | 450 | 400 | 450 | 400-500 |
| வெண்டக்காய் | 300 | 350 | 300 | 300-350 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 150 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 350 |
| லீக்ஸ் | 350 | 300 | 380 | 280 |
| பீற்றூட் | 250 | 250 | 300 | 150 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600-700 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2000 | 1500 |
| போஞ்சி | 150 | 200 | 300 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 250 | 140 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 150 | 60-70 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200-250 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 250 | 200 | 150-250 |
| இராசவள்ளி | 500 | 400 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 100 | 50-100 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 85 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 100 |

# இன்று ஒரு தகவல் 332



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இயல்பு மாறலாமா?

ஒருவர் இருந்தார். விலங்குகளிலே அவருக்கு மிகவும் பிரியம். தன் வீட்டில் ஒரு நாயை வளர்த்தார். அதே போல கழுதையையும் வளர்த்தார்.

அந்தக் கழுதை அவர் வீட்டுப் பின்பக்கத்திலே நின்றுகொண்டிருக்கும். ஏதாவது பொதிசுமக்கும் வேலை இருந்தால் அதை கவனிக்கும்.

அந்த நாய் வீட்டுக்குள்ளே இருக்கும். நாய்க்கு அந்த வீட்டிலே ராஜ உபசாரம் தான். அதற்கு அந்த வீட்டிலே ஏகப்பட்ட மரியாதை குளிப்பதற்கு சோப்பு! இரண்டு வேளையும் பால்-பிஸ்கட் மதியம் சாப்பாடு. அதற்கு ஏதாவது உடம்பு சரியில்லை என்றால் உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சை. மிகவும் கொடுத்து வைத்தது அந்த நாய்.

அந்த வீட்டுத்தலைவர் வெளியிலே வாக்கிங் போனால் கூடவே இதுவும் போகும். அவர் மட்டும் தனியாக எங்கேயாவது வெளியே போய் வந்தால் வீட்டுக்கு வந்த உடனே அந்த நாய் அவரிடம் ஓடிவரும். அப்படியே எழும்பி முன்னங்கால் இரண்டையும் அவர் தோள்மேலே போடும். அவர் சிரித்துக்கொண்டே அதன் தலையில் செல்லமாக தட்டுவார்.

அவர் ஈஸி செயாரிலே சாய்ந்து கொண்டு ரீவி பார்ப்பார். பத்திரிகை படிப்பார். அப்போதெல்லாம் அந்த நாய் அவருடைய காலடியிலேயே படுத்திருக்கும். அப்பப்ப கூட அவர் தலையில் செல்லமாக தட்டிக் கொடுப்பார். அந்த நாய் படுப்பதற்கு ஒரு மெத்தை. சில சமயம் அது அங்கே இருக்கிற மேசை நாற்காலி மேலே கூட ஏறி விளையாடும். சோபாவிலே ஏறி உட்கார்ந்திருக்கும். இவ்வளவு செல்லமாக வளர்ந்தது. அந்த நாய்!

இதை எல்லாம் அந்தக் கழுதை பார்த்தது. யோசிக்க ஆரம்பித்தது. என்ன இது. இந்த வீட்டிலே நாம் கழுதையாக உழைக்கிறோம். பொதி சுமக்கிறோம். நமக்கு ஒரு சாப்பாடு கிடையாது! படுக்கை கிடையாது. ஒரு நாளாவது நமது தலையிலோ முதுகிலோ தடவிக்கொடுத்தது கிடையாது. ஆனால் அந்த நாய் இந்த வீட்டுக்காக ஒரு துரும்பைக்கூட அசைச்சது இல்லை. அதைப்போய் இந்த வீட்டிலே உள்ளவர்கள் இப்படி தலையிலே தாங்குகிறார்களே! என்று யோசித்தது. வெகுநேரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

சரி இனிமேல் நாமும் அந்த நாய் போல நடந்துகொள்வோம். அது மாதிரியே Behave பண்ணுவோம். அப்போதாவது நமக்கு அந்த மரியாதை கிடைக்கிறதா பார்க்கலாம் என்று ஒரு திட்டம் போட்டிருந்தது. மனதுக்குள்ளே!

உடனே அந்தத் திட்டத்தை செயற்படுத்தவும் ஆரம்பித்தது. அதாவது அந்த வீட்டிலே அந்த நாய் என்னென்னவெல்லாம் செய்கிறதோ அதையெல்லாம் இதுவும் செய்ய ஆரம்பித்தது.

அந்த வீட்டு எஜமான் எங்கோ வெளியிலே சுற்றி விட்டு அசந்து போய் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். உடனே இந்தக் கழுதை அவரிடம் ஓடியது. அந்த நாய் என்ன செய்ததோ அதே போல தன் முன்னங்கால் இரண்டையும் தூக்கிப் போட்டது. அந்த ஆள் பயந்து போய்விட்டார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இது ஏன் இப்படி செய்கிறது. கொஞ்சம் ஒதுங்கி நின்றார். இது அவரை சுற்றி வந்து நாய் மாதிரி வாலை ஆட்டியது.

அவர் கிடு கிடு என்று வீட்டுக்குள்ளே போனார் இதுவும் பின்னாலே ஓடியது. அங்கே போய் நாய் போலவே மேஜை நாற்காலி மேலே ஏறி குதித்து விளையாடியது. சோபாவிலே உட்கார்ந்தது. மேசையிலிருந்த பொருட்கள் கீழே விழுந்து உடைந்தது. கழுதை மேடை மேலே ஏறி குதித்தால் என்ன ஆகும்.

அந்த ஆள் பார்த்தார். சரி இந்தக் கழுதைக்கு என்னமோ ஆகிவிட்டது என்று முடிவு செய்தார். ஒரு நல்ல கயிறாக கொண்டு வந்து அதன் காலிலேயும் கழுத்திலேயும் கட்டினார். தர தர என்று இழுத்துக்கொண்டு போனார். அடித்துக் கொல்லைப் பக்கத்தில் கட்டிப்போட்டார். அன்ன ஆகாரம் எதுவும் கொடுக்கவில்லை. பட்டினி போட்டார். இப்போது அந்தக் கழுதை யோசித்தது.


என்ன இது நம் எஜமானனுக்கு என்ன ஆனது? அந்த நாய் பழகுவது மாதிரியேதான் நானும் பழகினேன். ஆனால் அந்த மனிதன் நாயை அடிக்கவில்லை ஆனால் என்னை அடிக்கிறானே. இப்படி கொண்டுவந்து கட்டிப்போட்டுவிட்டானே. என்ன காரணமாக இருக்கும்என்று யோசிக்க ஆரம்பித்தது அந்தக் கழுதை. எதற்கு இந்தக் கதை என்றால் இது மாதிரி நாமும் கூட சில சமயம் யோசிப்பது உண்டு. நம் இயல்பு மாறி நடக்க ஆரம்பித்துவிட்டால் பல சமயங்களிலே இப்படி யோசிப்பது போல ஆகிவிடும்.அதனாலே ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்ளவேண்டுமோ அப்படி நடந்துகொண்டால்தான் நமக்கு மரியாதை.

வெறிநாய் கடித்துவிட்டால் மனிதனும் அதுமாதிரியே ஆகிவிடுகிறான் பார்த்தீர்களா? அவனுடைய இயல்பு மாறிவிடும். ஒருவரைப் பார்த்து இன்னொருவர் கேட்டார். வெறிநாய் ஒன்று உன்னைக் கடித்துவிட்டால் நீ என்ன செய்வாய் என்று.

நான் உடனே பேப்பரும் பேனாவும் கேட்பேன் என்றான் அவன். ஏன் உயில் எழுதுவதற்கா? என்று கேட்டான். இல்லை நான் யாரை யாரை எல்லாம் கடிப்பது என்று லிஸ்ட் தயார் செய்வதற்கு என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கின் பல பகுதிகளுக்கு ஆளுநர் திடீர் கள விஜயம்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் பல்வேறு பகுதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று திடீர் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டார்.

வலி. வடக்கில் மக்கள் பாவனைக்கு கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வசாவிளான் கிழக்கு, வசாவிளான் மேற்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு ஆகிய 5 கிராம அலுவலர் பிரிவுகளும் மக்கள் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை இன்னமும் காணப்படுகின்றது.

பாதுகாப்புத் தரப்பினரின் வேலி பின்நகர்த்தப்படாமையால் இவ்வாறான சூழல் நிலவுகின்றமை தொடர்பில் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் இந்தப் பகுதியிலுள்ள பலாலி சித்தி விநாயகர் பாடசாலையின் இடிபாடுகளுடன் கூடிய கட்டடத்தையும் பார்வையிட்டார்.

அத்துடன் மயிலிட்டி வைத்தியசாலை வீதி கடந்த காலங்களில் கொங்கிரீட் வீதியாக அமைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அதனை மூடி சுகாதாரத் திணைக்களத்தால் வேலி அடைக்கப்பட்டுள்ளதாக மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலும் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

காங்கேசன் துறையிலுள்ள சிறுவர் பூங்காவுக்கான பாதையைப் பாதுகாப்புத் தரப்பினர் மூடி வைத்துள்ளமையால் எழுந்துள்ள நெருக்கடி தொடர்பாகவும், காங்கேசன் துறை ரயில் நிலையத்துக்கு அருகில் பிரதேச சபையின் பாதையை மூடித் தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதையும் ஆளுநர் பார்வையிட்டார்.

கீரிமலையிலுள்ள செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கான பாதை, பற்றைகள் மூடி உள்ளமையையும் அதனால் மக்கள் தனியார் பாதை ஊடாகச் சென்று வருகின்றமையும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அதனையும் ஆளுநர் நேரடியாகப் பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் துறைசார் தரப்புக்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## கல்மடுக்குளத்தின் கீழ்

# 2 ஆயிரத்து 150 ஏக்கரில் சிறுபோக பயிர்ச்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான கல்மடுக் குளத்தின் கீழ் இரண்டாயிரத்து 150 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கையும் அதற்கு மேலாக 200 ஏக்கர் உப உணவுப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான கல்மடுக் குளத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டம் நேற்று பகல் 9.30 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலத்தில் கண்டாவளை செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றது

இதன்போது குறித்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலகலந்து கொண்டனர்.(6-8-315-316)

# மணல் கடத்திய 2 டிப்பர் வாகனங்கள் மடக்கிப்பிடிப்பு



(சாவகச்சேரி)

போலி அனுமதிப்பத்திரத்துடன் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு டிப்பர் வாகனங்களை நேற்று வெள்ளிக்கிழமை ஏ-9 வீதி சாவகச்சேரியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் போலியான கடிதத் தலைப்பு- பதவி முத்திரை ஆகியவற்றைப் பயன்படுத்தியே மேற்படி மணற் கடத்தல் இடம்பெற்றுள்ளது.

மேற்படி திணைக்களத்தின் ஊடாக மேற்படி அனுமதி போலியானது என்பதனை உறுதிப்படுத்திய பொலிஸார் இரண்டு டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளதுடன் அந் நபர்களை நீதி மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (6-8-30)

# ஆசிய வலைப்பந்தாட்ட போட்டி; வீராங்கனைகள் தெரிவு 8 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

ஆசிய வலைப்பந்தாட்ட போட்டிக்கு வீராங்கனைகளை தெரிவு செய்வதற்கான தேர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளதாக விளையாட்டுக் குழு இயக்குநர் செமல் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொரியாவில் நடைபெறவுள்ள ஆசிய கனிஷ்ட வலைப்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் தீர்மானித்துள்ளது.

முதல் தேர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி அன்று களனி பல்கலைக்கழக உள்ளக அரங்கில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

01.01.2004 இற்குப் பிறகு பிறந்த பெண் வீராங்கனைகள் இந்தத் தேர்வுத் தேர்வில் பங்கேற்கலாம். மற்றும் அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் வீரர்கள் முழு நேர வதிவிடப் பயிற்சி நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டும்.

அதன்படி, மாவட்ட கழக விளையாட்டுக் கழகம் மூலம் விளையாட்டுப் பெண்களுக்குத் தெரிவித்து, குறிப்பிட்ட திகதியில் தேர்வுத் தேர்வில் பங்கேற்கத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு விளையாட்டுக்குழு இயக்குநர் தெரிவித்துள்ளார். (6-8-90)

# தாளையடி நன்னீராக்கல் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஆளுநர் விஜயம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்டத்தின், தாளையடியில் அமைந்துள்ள கடல்நீரை நன்னீராகச் சுத்திகரிப்புச் செய்யும் நிலையத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

குடிநீர் விநியோகத் திட்டத்தின் கட்டுப்பாட்டு அறையின் செயற்பாடுகளை ஆளுநர் பார்வையிட்டார். அதன் பின்னர் கடல்நீரை உள்ளெடுக்கும் நிலையம், சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது திட்டப் பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர்களால் உரிய விளக்கங்களும் ஆளுநருக்கு வழங்கப்பட்டன. (6-8)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு எமது நீதி மன்ற வளாகத்தில் 54 டிப்பர் மணல், 3 டிப்பர் கிரவல், 4 டிப்பர் மண் மற்றும் 75 துவிச்சக்கர வண்டிகள், 370 சவல் இரும்புக் கம்பிகள், 100 பரல்கள் என்பன ஏல விற் பனை செய்யப்படவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# தருமபுரம் பொதுச்சந்தைக்கு வருவோர் அசௌகரியம்

(தருமபுரம்)

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள தருமபுரம் பொதுச் சந்தை அண்மைக் காலமாக உரிய முறையில் கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சந்தையானது வாரத்தில் இரு நாட்கள் அல்லது வாரத்தில் ஒரு நாளே கழிவகற்றல் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக சந்தைப் பகுதி தொடர்ச்சியாக கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுவதுடன் தற்பொழுது பெய்து வரும் மழை காரணமாக துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் ஆங்காங்கே கால்நடைகளின் எச்சங்களும் மழையில் கரைந்தோடி அசுத்தமான நிலையில் காணப்படுகின்றது.

இச்சம்பவத்தால் நாளாந்தம் சந்தைக்கு வரும் பொதுமக்கள், கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

எனவே இதுதொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8-316)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை ஆழ்வார் வீதியில் அமைந்துள்ள முதலி வளவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

12 தினங்கள் இடம்பெறவுள்ள ஆலயத்தின் உற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை வேட்டைத்திருவிழாவும் 10 ஆம் திகதி சப்பறமும் 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி காலை அபிஷேகங்களை தொடர்ந்து காங்கேசன்துறை கடற்கரையில் தீர்த்தம் இடம்பெறவுள்ளது.

13 ஆம் திகதி வைரவர் உற்சவத்தோடு திருவிழா நிறைவு பெறவுள்ளது என ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 714





சக்கரவர்த்தியின் கட்டளைக்கு விரோதமாக நான் நடந்தேன் என்று குற்றம் சாட்டுவதற்காக இந்தச் சூழ்ச்சி நடந்திருப்பதாகத் தோன்றுகிறது. நான் கடலில் மூழ்கி இறந்து விட்டதாகவும் கதை கட்டி விட்டிருக்கிறார்கள். குருதேவரே! என்னைத் தாங்கள் இந்தச் சூடாமணி விஹாரத்தில் ஏற்றுக்கொண்டதே இராஜ துரோகமான காரியம். மேலும் வைத்திருப்பது பெருங் குற்றமாகும். உடனே என்னைத் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுங்கள்."

"இளவரசே! தங்களுக்கு இடங்கொடுத்ததற்காக எனக்கு இராஜ தண்டனை கிடைப்பதாயிருந்தால் அதைக் குதூகலத்துடன் வரவேற்பேன். அதன் பொருட்டு இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்தை இடித்துத் தள்ளி மண்ணோடு மண்ணாக்கி விடுவதாயிருந்தாலும் பாதகம் இல்லை"

"தங்களுடைய பரிவைக் குறித்து மகிழ்கிறேன், குருதேவரே! ஆனாலும், என்னைக் கொண்டு வந்தவர்களிடம் ஒன்றும் விசாரியாமல் எப்படி என்னை ஏற்றுக் கொண்டீர்கள்?"

"விசாரிப்பதற்கு அவசியம் என்ன? கடும் சுரத்தோடு வந்த தங்களை வரவேற்றுச் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் என்னைப் போன்ற பிக்குக்களுக்கு வேறு என்ன உயர்ந்த கடமை இருக்க முடியும்? மேலும் தங்களுடைய திருத்தமக்கையார், குந்தவை தேவியார், தாங்கள் இங்கு வந்து சிலநாள் தங்கக்கூடும் என்று முன்னமே எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள்."

"ஓ! அப்படியா! இளைய பிராட்டியா அவ்விதம் சொல்லி அனுப்பியிருந்தார்? எப்போது?"

"தாங்கள் இங்கு வருவதற்கு சில நாளைக்கு முன்பு. தங்களைக் கொண்டு வந்த சேந்தன் அமுதனும், 'இளைய பிராட்டியின் விருப்பம்' என்று தான் கூறினான்."

"குருதேவா! என்னை அழைத்து வந்தவர்கள் இருவரும் உடனே திரும்பி போய்விட்டார்களா? அவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா? அவர்களைப் பார்த்தாவது, சில விபரங்கள் எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டும்."

"ஐயா! பதற்றம் வேண்டாம். அவர்கள் இருவரும் இந்த நகரத்திலேதான் இருக்கிறார்கள். தினம் ஒருமுறை வந்து தங்கள் உடல் நிலையைப் பற்றி விசாரித்துப் போகிறார்கள். இன்றைக்கு ஏனோ இதுவரையில் வரக் காணோம்."

அச்சமயத்தில் சின்ன பிக்கு வந்து குருதேவரைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தார். ஆச்சாரிய பிக்கு, "இதோ வந்து விட்டேன், ஐயா!" என்று கூறிவிட்டு வெளியே சென்றார். சற்று நேரத்துக் கெல்லாம் அவர் திரும்பி வந்தபோது இளவரசன் அருள் மொழிவர்மனுடைய பரபரப்பு மேலும் அதிகமாகியிருப்பதைக் கண்டார்.

"ஆச்சாரியரே! இனி ஒரு கணமும் நான் இங்கே தங்கியிருக்க முடியாது. சக்கரவர்த்தியின் கட்டளையை மீறி நான் இங்கே வந்து ஒழிந்திருந்தேன் என்ற பழியை ஏற்க நான் விரும்பவில்லை. என்னால் இந்தப் புராதனமான சூடாமணி விஹாரத்துக்கு எந்த விதமான தீங்கு நேரிடுவதையும் விரும்பவில்லை" என்றான் இளவரசன். பெரிய பிக்கு மலர்ந்த முகத்துடன், "உண்மையில் அத்தகைய பெரும் பொறுப்பை நானும் இனி வகிக்க முடியாது. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஈவது விலக்கேல்



மதினாபுரம் என்ற நாட்டை மகேந்திர குமரன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். மன்னர் மகேந்திரகுமரன் அறிஞர்களையும் கவிஞர்களையும் ஆதரித்து வந்தார்.

தன்னைத்தேடி வருகின்ற கவிஞர்களுக்கு ஏராளமாக பரிசுகள் கொடுத்து கௌரவித்தார். மகேந்திரவர்மனின் அரசவையில் சித்ரவதனா என்ற அரசவைக் கவிஞர் புதியதாக நியமிக்கப்பட்டார்.

கவிஞர் சித்ரவதனாவுக்கு மற்ற கவிஞர்கள் அரசவைக்கு வந்து மன்னரிடம் பரிசு வாங்குவது அறவே பிடிக்கவில்லை. மன்னர் கவிஞர்களுக்குப் பரிசு கொடுப்பதையே தடுத்துவிட வேண்டுமென முடிவு செய்தார்.

அரசவைக்கு மன்னரைத் தேடி நாட்டின் தலைசிறந்த கவிஞர்கள் எல்லாம் தாங்கள் இயற்றிய கவிதைகளோடு மன்னரைக் காண வந்தார்கள். அவர்களைக் கண்ட சித்ரவதனா, அந்தக் கவிதைகளில் குறைகள் இருப்பதாகக் கூறி அவர்களை பரிசு பெறாமல் செய்து விடுவார்.

இதனால் மன்னரைக் காண்வந்த கவிஞர்கள் எல்லாம் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். அவர்கள் குடும்பமெல்லாம் வறுமையில் வாடியது. அரசவைக் கவிஞர் சித்ரவதனாவின் செயலை அரண்மனை விகடகவி அறிந்து கொண்டார்.

எப்படியாவது சித்ரவதனாவை அரசவை கவிஞர் பதவியிலிருந்து இறக்கி மற்ற கவிஞர்கள் வாழ வழி செய்ய வேண்டுமென்று, முடி வெடுத்தார். தனது எண்ணம் நிறைவேற என்ன செய்வதென, நீண்ட நேர யோசனையில் ஆழ்ந்தார். மறுநாள் அரசவைக்கு வரும் நேரம் கவிஞர் வேடத்தில் வந்தார் விகடகவி.

மன்னரை வணங்கிய அவர் "மன்னர் பெருமானே! எமது தொழில் கவிதைகள் இயற்றுவது! நான் உங்கள் அரசவைக் கவிஞரிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டி நெடுந் தூரத்திலிருந்து வந்துள்ளேன். என் கேள்விக்கு சரியான பதிலை உங்கள் அரசவை கவிஞர் கூற வேண்டும்.

இல்லையென்றால் அவர் தன் பதவியையே ராஜினாமா செய்ய வேண்டும் என்றார். அதனைக் கேட்ட மன்னருக்கோ ஆத்திரம் வந்துவிட்டது. "கவிஞரே! எனது அரசவைக் கவிஞரைப் பற்றி உமக்குத் தெரியாது! அவரிடம் நீர் வம்பு செய்து வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகின்றீர்" என்று கோபத்துடன் கூறினார். அதனைக் கேட்ட கவிஞர் வேடத்திலிருந்த விகடகவி "மன்னரே கோபம் வேண்டாம். உங்கள் அரசவைக் கவிஞரின் அறிவுத் திறமையை இப்போது நேரில் எல்லோருமே பார்த்துவிடலாம்.

அவர் என் கேள்விக்கேற்ற பதிலை சரியாக சொல்லவில்லையென்றால் அவர் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கின்றாரா? என்று கேட்டுச் சொல்லுங்கள்" என்று கூறினார்.

அதே நேரம் அரசவை கவிஞர் சித்ரவதனாவே தன் இருக்கையை விட்டு எழுந்து கொண்டார். "கவிஞரே உமது கேள்வியைக் கேளும். நான் பதில் சொல்லவில்லையென்றால், உடனே ராஜினாமா செய்கிறேன். அதே இடத்தில் உம்மை மன்னரிடம் சிபாரிசு செய்து அரசவைக் கவிஞராக நியமிக்கிறேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை சரியாக உணரும் பொழுது வீணான எண்ணங்கள் என்னும் விலங்கிலிருந்து விடுபட முடியும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுர எடுத்த சிறந்த தீர்மானம்

அமைச்சுகளுக்குச் சொந்தமானதும் அதிக செலவுகளையுடையதுமான சொகுசு வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதென்று ஜனாதிபதி அநுர எடுத்த முடிவு உண்மையில் வரவேற்கப்பட வேண்டும்.

பொதுவில் அரச வாகனங்கள் பொதுக் கிணற்று வாளி போலவே பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு சில சாரதிகளைத் தவிர, ஏனையவர்கள் அரச வாகனங்களைத் தகுந்த முறையில் பராமரிப்பதுமில்லை பேணுவதுமில்லை.

இதனால் அரச அமைப்புகளில் உள்ள வாகனங்களில் பெரும்பாலானவை பயன்பாடு அற்றவையாக இருப்பதுடன் வாகனத் திருத்தச் செலவுகளும் அதிகளவாக உள்ளன.

இந்நிலையில் அமைச்சுகளுக்குச் சொந்தமான – அதிக செலவைத் தரக்கூடிய சொகுசு வாகனங்களை விற்பனை செய்வதென்ற அரசாங்கத்தின் தீர்மானம் செலவை மீதப்படுத்தக்கூடியதாகவுள்ளது.

தவிர, மேற்படி அரசுக்குச் சொந்தமான சொகுசு வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வது என்ற தீர்மானத்தைப் போல அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளில் உள்ள பழுதடைந்த வாகனங்கள் அனைத்தையும் ஏலத்தில் விற்று, கிடைக்கின்ற பணத்தை அரச திறைசேரிக்குரியதாக்க வேண்டும்.

உண்மை. அரச அமைப்புகளில் கைவிடப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய வாகனங்கள் எந்தவிதக் கவனிப்புமின்றி உக்கி உழுத்துப் போவதைக் காண முடிகிறது.

அதிலும் சிறு பிழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ள அரச வாகனங்கள் ஏராளம்.

அதிலும் கமத்தொழில் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் உழவுக்குரிய கருவிகள் பயன்பாடின்றி சம்பந்தப்பட்ட கமத்தொழில் சேவை நிலையங்களில் உக்கிப் போவதைப் பார்க்கும்போது நெஞ்சு பொறுக்கவில்லை.

அந்தளவுக்கு அரச சொத்துக்கள் எந்தவித பராமரிப்பும் பாதுகாப்புமின்றி அழிவடைகின்றன.

அதிலும் குறிப்பாக, வடபுலத்தில் உள்ள ஒவ்வொரு கமத்தொழில் சேவை நிலையங்களுக்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உழவு இயந்திரங்களை வழங்கி, குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு நிலத்தைப் பண்படுத்திக் கொடுப்பதற்கு வழிவகை செய்தன.

இருந்தும் குறித்த உழவு இயந்திரங்கள் உரியவாறு பயன்படுத்தப்படாமல் ஊழலுக்கும் மோசடிக்கும் பயன்படுத்தப்பட்டன.

தவிர, குறித்த சில கமத்தொழில் சேவை நிலையங்கள் தமக்குத் தமக்குத் தெரிந்தவர்களிடம் உழவு இயந்திரங்களை ஒப்படைத்து, அதன் சேவையை மட்டுப்படுத்திக் கொண்டன.

இதன் காரணமாக, கஷ்டப்பட்ட விவசாயிகளுக்கு குறித்த சேவையும் அதன் நன்மையும் கிடைக்கவில்லை.

தவிர, குறித்த உழவு இயந்திரங்கள் ஒரு சொற்ப காலத்தில் உதிரிப்பாகங்கள் மாற்றப்பட்டு பழுது என்ற பேரில் கட்டையில் ஏற்றப்பட்டன.

எனவே இத்தகைய உழவு இயந்திரங்கள் உட்பட அரச அமைப்புகளில் பழுது என்ற பேரில் விடப்பட்டுள்ள அத்தனை வாகனங்களையும் விற்றுத் தீர்ப்பதான முடிவையும் அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இதன்மூலம் அரச சொத்துக்கள் வீணே அழிவடைவதைத் தடுக்கமுடியும்.

## சொந்த நாட்டுக்குள்ளேயே தமிழ் மக்கள் நிலமிருந்தும் அகதிகளாய் திறந்தவெளி சிறைச்சாலையில் வாழ்கின்றனர் - சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் நான்கில் மூன்று பகுதியினர் வடக்கு கிழக்கிலேயே நிலை கொண்டுள்ளனர். இதனால் திறந்தவெளி சிறைச்சாலைக்குள் வாழும் நிலையே வடக்கு கிழக்கு மக்களுக்குக் கிட்டியுள்ளது என்று சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் யுத்தமில்லாத நாட்டில் ஏன் இவ்வளவு படையினர் வடக்கு கிழக்கில் நிலை கொண்டுள்ளனர் எனவும் கேள்வியெழுப்பினர்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் குறித்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

நிலங்கள் விடுவிக்கப்படாமையினால் சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாக வாழவேண்டிய நிலையே தமிழ் மக்களுக்குக் கிட்டியுள்ளது.

அவர்களின் நிலங்களை விடுவிப்பதற்கான காத்திரமான வேலைத் திட்டங்கள் எதனையும் இதுவரை எந்த அரசாங்கங்களும் முன்னெடுக்காமை வருந்தத்தக்க விடயம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேலும் தெரிவித்தார். (ம-7)

## எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கான 3% தள்ளுபடிச் சலுகை இன்றுடன் இரத்து

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

எரிபொருள் விநியோகஸ்தர்கள் தற்போது பெற்று வரும் 3 சதவீதத் தள்ளுபடி இரத்துச் செய்யப்பட்டு, இன்று (01) முதல் அமுலுக்கு வரும் புதிய சூத்திரத்தின்படி பணம் செலுத்தப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ராஜகருணா தெரிவித்தார்.

நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், இதுவரை அவர்கள் பெற்றுள்ள 3% தொகை சட்டவிரோதமானது எனத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர் 2022 மார்ச் 10 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படிதான் விநியோகஸ்தர்களுக்கு 3% தள்ளுபடி கிடைத்திருந்தது. அதன்படி இப்போது செலுத்தப்படும் தொகை சட்டவிரோதமானது.

அந்தச் சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, டீசலின் விலை 121 ரூபாவுக்கு மேல் சென்றால், அதற்கு தொடர்புடைய 3% தொகையைத் தான் செலுத்த வேண்டும்.

உதாரணமாக பெற்றோல் விலை ரூபா.162 எனின், ஒரு லீட்டர் பெற்றோலுக்கு இவர்களுக்கு தள்ளுபடியாக 3.63% கிடைக்க வேண்டும்.

டீசலுக்கு 4.86% கிடைக்க வேண்டும். ஆனால், கடந்த மாதம் 3% ஆக கணக்கிடப்பட்டால், பெற்றோல் 92க்கு 8.52 ரூபாவும், பெற்றோல் 95 மற்றும் சூப்பர் டீசலுக்கு அதைவிட அதிகமான தொகையும் செல்கிறது.

2022 ஆம் ஆண்டில் எரிபொருள் விலை அசாதாரணமாக உயர்ந்தது. அந்த விலை உயர்வுக்குப் பிறகு 3% ஆக கணக்கிட்டால், அது 14-15 ரூபாவுக்குச் சென்றது.

ஆனால் 2022 சுற்றறிக்கையின்படி, டீசல் விலை 121 ரூபாவுக்கு மேல் உயர்ந்தால், 3% மட்டுமே இவர்களுக்கு கிடைக்க வேண்டும். இது எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக நடந்தது.

எங்கள் எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் முறைமை சரியாக அமைக்கப்பட்டிருந்தால் 3.63% க்கு மேல் இவர்களுக்கு செல்லாது.

அதன் பிறகு இவர்கள் தொடர்ந்து இதை வேண்டும் என்று நீதிமன்றம் சென்று தடை உத்தரவு பெற்றனர். அந்த உத்தரவு காரணமாக 3% தொடர்ந்து சென்றது.

பின்னர் அந்த வழக்கு தோல்வியடைந்தது. மீண்டும் இதை நீக்க முயலும் போது, மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சென்று மீண்டும் தடை உத்தரவு பெற்று 14-15 ரூபா வரையிலான தொகையை பெற்றனர்.

பின்னர் இது தொடர்பாகத் தணிக்கை நடத்தப்பட்டது. தணிக்கையில், அநீதியான முறையில் 35.4 பில்லியன் ரூபா மக்களிடமிருந்து பெறப்பட்டு விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரியவந்தது.

இதைத் தவிர்க்க இந்த 3% தள்ளுபடியை நீக்கி, இவர்களின் செலவுகளுக்கு ஏற்ப ஒரு சமநிலைப்படுத்தலை உருவாக்குவது எனத் தீர்மானித்தோம். அதை நாங்கள் அமைச்சு செயலாளருக்கு தெரிவித்தோம்.

செயலாளர்ஒரு குழுவை நியமித்தார். அந்தக் குழுவின் தீர்மானம் தான் நாளை (இன்று) முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றார். (ம-7)

## எரிபொருள் விநியோகத்திலிருந்து விலகும் விநியோகஸ்தர்கள்

நள்ளிரவு முதல், எரிபொருள் விநியோகஸ்தர்கள் பெற்றோலியப் பொருட்களை விநியோகிப்பதில் இருந்து விலகுவதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பெற்றோலியப்பொருட்களை மட்டுமே விநியோகித்து வருவதாகவும், எரிபொருள் இருப்புக்களுக்கு எந்தக் கேள்விகளையும் வழங்கப்போவதில்லை என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## எரிபொருள் விநியோகம் தடைப்படவில்லை

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர்

(கொழும்பு)

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதெனவும் பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாம் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நாட்டில் எவ்வித எரிபொருள் பற்றாக்குறையும் ஏற்படவில்லையெனவும், எரிபொருள் போக்குவரத்து செயற்பாடுகள் வழமையான முறையில் இடம்பெறுகிறது.

எரிபொருள் விநியோகஸ்தர்கள் எரிபொருள் விநியோகத்தை நிறுத்துவதாக எந்த உறுதிப்படுத்தலையும் இதுவரை தெரிவிக்கவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியானது இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் விஜயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## கிளிநொச்சியைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டமும் இணையவழியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று இரவு 8 மணிக்கு இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்காக ஏப்ரல் மாதம் வரையான கணக்கு அறிக்கையில் ஒதுக்கிய 56 மில்லியன் ரூபா மற்றும்விசேட விதி அமைப்புக்கான நிதிகள் என்பவற்றுக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் அனுமதியைப் பெறும் நோக்கிலேயே இக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமும் ஏற்கனவே இணைய வழியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சஞ்சீவ படுகொலை நீதவானிடமும் வாக்குமூலம்

பாதாள உலகத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பாக, அவர் கொலை செய்யப்பட்ட போது நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்கிய நீதவானை மற்றொரு நேரில் கண்ட சாட்சியாகக் கருதி வாக்குமூலங்கள் பெறப்படும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்புக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ்மா அதிபர் மூலம் எழுத்துப்பூர்வ கோரிக்கை குறித்த நீதவானிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசிபலன்கள்-2025

## மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும்



கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு- தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது -லாப ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி - அயன சயன போக ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் இலாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** புத்திசாதுரியத்தால் புகழையும் செல்வத்தையும் பெறும் மேஷ ராசிக்காரர்களே! இந்தமாதம் எண்ணிய காரியங்களை திறமையாக செய்து முடிப்பீர்கள். பணவரவு இருக்கும். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். பயணம் செல்ல வேண்டி இருக்கும். சில முக்கியமான முயற்சிகள் அதிக உழைப்பின் பேரில் செய்ய வேண்டி இருக்கும். சொத்துக்கள் மீது கவனம் தேவை.

தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிபடுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஓடர் வந்து சேரும். பழைய பாக்கிகளின் வசூல் தாமதமாக இருந்தாலும் பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். வேலை தொடர்பாக வெளியூரில் தங்க நேரிடலாம்.

குடும்பத்தில் இருப்பவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் தாமதப்படும். ராசிக்கு 12இல் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் வாழ்க்கை துணைக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் அன்பு அதிகரிக்கும். சிற்றின்ப செலவுகள் கூடும். அக்கம் பக்கத்தினரிடம் கவனமாக பேசுவதும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது. சிலருக்கு வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

கலைத்துறையினருக்கு காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். பணவரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். வாழ்க்கையில் முன்னேற வேகம் காட்டுவது நல்லது. மனக்குழப்பம் நீங்கும். தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடன் காரியங்களில் ஈடுபடுவீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும்.

அரசியல்துறையினருக்கு மனக் கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திடீர் செலவு உண்டாகலாம். திட்ட




மிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் யோசித்து செய்வது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைய கூடுதல் நேரம் ஒதுக்கி படிப்பது நல்லது. கல்வி தொடர்பாக பயணம் செல்ல வேண்டி இருக்கும்.

**அஸ்வினி:** குடும்பத்தில் ஒற்றுமை, சுபகாரியங்கள் நடைபெறும் வாய்ப்பு, பொருளாதார உயர்வு, கடன்கள் குறைய கூடிய அமைப்பு உண்டாகும். தேவையற்ற வம்பு வழக்குகள், மறைமுக எதிர்ப்புகள் ஏற்படும் என்பதால் எதிலும் நிதானம் தேவை. பொருளாதார நிலை மிக சிறப்பாக அமையும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு இலாபமும் அபிவிருத்தியும் பெருகும்.

**பரணி:** கணவன் மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். பிரிந்து சென்ற உறவினர்களும் தேடி வந்து நட்புக்கரம் நீட்டுவார்கள். உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. கை, கால் மூட்டுகளில் வலி, எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வரலாம். மருத்துவ செலவுகள் அதிகரிக்கும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** தம்பதிகளிடையே உண்டாகக் கூடிய கருத்து வேறுபாடுகளால் குடும்பத்தின் ஒற்றுமை குறையும். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். நண்பர்கள் உறவினர்களிடையேயும் பகைமை உண்டாகும். முடிந்த வரை பிறர் விடயங்களில் தலையிடாமல் தவிர்த்து விடுவது நல்லது.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமை தோறும் விரதம் இருந்து முருகனை கந்தசஷ்டி படித்து வழிபடுவது எல்லா நன்மைகளையும் தரும். அலைச் சலை தவிர்க்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** செவ்வாய், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 19, 20, 21

**அதிஷ்ட தினங்கள்:** 12, 13, 14

## எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும்



கிரகநிலை - ராசியில் குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் கேது- தொழில் ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி - லாப ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன், புதன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 04-03-2025 அன்று சுக்கிர பகவான் வக்கிரம் ஆகிறார். 09-03-2025 அன்று புதன் பகவான் வக்கிரம் ஆகிறார். 14-03-2025 அன்று சூரிய பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-03-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் புதன் பகவான் இலாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-03-2025 அன்று புதன் வக்கிர நிவர்த்தி ஆகிறார்.

**பலன்கள்:** சொன்ன சொல்லை காப்பாற்றும் குணமுடைய ரிஷப ராசியினரே! இந்த மாதம் தைரியமாக எதையும் செய்ய தோன்றும். உங்களது செயல்களால் உங்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டு கிடைக்கும். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபடுவீர்கள். தந்தை மூலம் உதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வருமானம் இருக்கும். சகோதரர்களுக்குள் ஒற்றுமை குறையும்.

தொழில், வியாபாரத்தில் முழுக் கவனத்தையும் செலுத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். அரசாங்கம் மூலமாக நடக்க வேண்டிய காரியங்களும் நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கலின்றி எதையும் செய்து முடிப்பார்கள். பணி தொடர்பான பயணங்கள் இருக்கும்.

கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் மூலம் ஆதாயம் உண்டாகும். குடும்பத்துடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். தந்தை வழி உறவினர்களுடன் இருந்து வந்த மனக்கிலேசம் அகலும். ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். உங்களது பொருட்களின் மீது கவனம் தேவை. சாதுரியமான செயல்களால் இலாபம் உண்டாகும்.

பெண்கள் எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு சிறப்பாக செய்வீர்கள். பெரியவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு- எல்லா காரியங்களிலும் அதிக கவனம் உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். தன்னம்பிக்கை ஏற்படும். வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும்.

அரசியல்துறையினருக்கு வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். வெளிநபர்களால் ஏதாவது




குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளைக் கேட்பதை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் தடங்கல் இன்றி நன்றாக படிப்பீரகள். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் மூலம் கல்விக்கான உதவிகள் கிடைக்கும்.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருந்தாலும் செலவுகள் கட்டுக்குள் இருப்பதால் எதையும் சமாளித்துவிட முடியும். ஆடம்பர செலவுகள் கூடவே கூடாது. புதிய வீடு, மனை வாங்கும் முயற்சிகளில் கவனம் தேவை. திருமண வயதை அடைந்தவர்களுக்கு நல்ல வரன்கள் கிடைக்கப் பெற்று திருப்தியான மண வாழ்க்கையும் அமையும். சந்தாண பாக்கியமும் கிட்டும்.

**ரோகிணி:** என்ன தான் பாடு பட்டாலும் திறமைகளை வெளிபடுத்த முடியாதபடி தடைகள் ஏற்படும். உங்களின் உழைப்பிற்கான பாராட்டுதல்களை பிறர் தட்டிச் செல்வார்கள். எதிர்பாராத இடமாற்றங்களால் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டியிருக்கும். தேவையற்ற இட மாற்றங்களால் அலைச்சல்களும் உண்டாகும்.

**மிருகசிரீஷம் 1, 2ஆம் பாதங்கள்:** மேலதிகாரிகளிடம் பேசும் போது நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. அடிக்கடி உடலில் பாதிப்புகள் உண்டாவதால் விடுப்பு எடுக்க வேண்டிய சூழ்நிலைகளும் உண்டாகும். வரவேண்டிய நிலுவைத் தொகைகளும் இழுபறியில் இருக்கும். வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டியதிருக்கும்.

**பரிகாரம்:** பௌர்ணமியில் மகாலட்சுமியை பூஜை செய்து வழிபட பணத்தட்டுப்பாடு நீங்கும். குழப்பங்கள் தீரும்

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 22, 23

**அதிஷ்ட தினங்கள்:** 15, 16, 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பிலேயே தேசபந்து தென்னகோனை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## கச்சதீவு...

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே சுமார் 64 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கச்சதீவில் நடைபெறும் இந்த விழா, நூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழ் அரசியல்...

காரம் தொடர்பில் சிறீதரன் எம்.பி வினவியிருந்தார்.

1.தற்போது எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர்?

2.இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் எந்தெந்தச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்?

3.இவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள்?

4.மனிதாபிமான அடிப்படையிலோ, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையிலோ இவர்களை விடுதலை செய்ய முடியுமா? என்ற கேள்விகளை சிறீதரன் சபையில் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார,

இந்தக் கேள்விகள் முக்கியமானவை எனவும் இந்த விடயம் தொடர்பில் முழுமையான விளக்கத்தை வழங்க தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் பாதீட்டினுடைய நீதி அமைச்சுத் தொடர்பிலான செலவு அறிக்கையை நாளை (இன்று) சமர்ப்பிக்கவுள்ளதால் அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். எனவே ஒருவார கால அவகாசம் கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த சிறீதரன் எம்.பி அமைச்சரின் கருத்துக்குத் தலை சாய்ப்பதாகக் குறிப்பிட்டார். (ம-7)

## செம்மணியில்...

யாழ்.செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மீட்கப்பட்ட எச்சங்கள் தொடர்பான வழக்கு நேற்று இரண்டாவது தடவையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண நீதவான் ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கின்போது சட்ட வைத்திய அதிகாரி தமது அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பித்தார்.

குறித்த பகுதியில் 40க்கும் மேற்பட்ட எலும்பு மாதிரிகள் பெறப்பட்டதாகவும், அவற்றில் இரண்டு மாதிரிகளை விட ஏனைய அனைத்தும் மனித எச்சங்களின் மாதிரிகளாக உள்ளதாகச் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை மூலம் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டது.

இது குறித்து முதற்கட்ட ஆய்வு செய்ய வேண்டும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் மன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

அத்துடன் 2 அடி ஆழத்துக்குக் கீழேயிருந்தே இந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்ச்சியாக மனித எச்சங்களால் நிறைந்த பகுதியாக உள்ளதா? அல்லது தனிப்பட்ட புதைகுழியாக உள்ளதா? எனவும் ஆய்வு செய்ய வேண்டும் எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் மூத்த தொல்லியல் ஆராய்ச்சியாளர் ராஜ் சோமதேவா இது குறித்து தனது ஆய்வினைச் செய்வதற்கு விருப்பத்தைத் தெரிவித்துள்ளதாகவும், அவரே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான ஆய்வினையும் மேற்கொள்வதாகக் கூறினார்.

இவற்றைக் கருத்திற் கொண்ட நீதவான், முதற்கட்டமாக ஸ்கான் மூலம் ஆய்வினைச் செய்வதாகவும், எதிர்வரும் 4ஆம் திகதி 3 மணிக்கு இது தொடர்பான வழக்கு மன்றில் இடம் பெறும் எனவும் நீதவான் அறிவித்துள்ளார். (ம-7,33)

## பயங்கரவாதத்...

யாற்றுகையில்,

புதிய சட்டக் கட்டமைப்பின் மூலம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இரண்டு வழிமுறைகள் இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

இனவெறி அல்லது தீவிரவாதம் அவற்றில் ஒன்று என்றும், இந்த நாட்டில் நடந்த ஈஸ்டர் தாக்குதல்கள் போன்ற தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த பல கடுமையான சம்பவங்களுக்கு இனவெறி மற்றும் தீவிரவாதம்தான் மூலகாரணம்.

இந்த நாட்டில் எந்த நேரத்திலும் இனவெறி மற்றும் தீவிரவாதத்திற்கு இடமளிக்கப்படாது என்றும் ஜனாதிபதி கூறினார். (ம-7)

## வடக்கில்...

இதனால் வட மாகாணத்தில் மழையுடனான கால நிலை தொடரும் என எதிர்பார்ப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ம-7)

## எரி...

தத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய தற்போது அமுலில் உள்ளவிலைகளில் எரிபொருட்கள் தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்...

சிகிச்சைப் பிரிவு இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## இரா...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அத்தியாவசியமான இராணுவ முகாம்களைத் தவிர்த்து ஏனையவற்றை மூடுவதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இராணுவம் வசமுள்ள காணிகள் முறையான மீளாய்வுகளுடன் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்றார்.

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களும், பெருந்தோட்ட மக்களும் அரசாங்கத்துக்கு விசேட ஆணை வழங்கியுள்ளார்கள். ஆகவே அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்தே செயற்படுகிறோம்.

"தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 5761
H 4 4 3 0 4 6
அத சம்பத
H 3 0 4 6
சீட்டிழுப்பு இலக்கம் 0336

தன நிதானய
திகதி - 2025.02.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1791
P 14 44 54 60 P
71648

மெகா பவர்
திகதி 28/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2109
O 20 09 33 48 78

ஜய
திகதி 2025.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 029
H 1 0 8 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4003
சீட்டிழுப்பு திகதி 28.02.2025
E 09 19 72 73
E

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 1070
மீனம் 05 22 28 29 மீனம்
63979 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.02.2025 வெற்றி வாரம் 469
F 4 7 9 4 2 9
117056
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,566,475.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2735
சீட்டிழுப்பு திகதி 2025.02.28
தினம் வெள்ளிக்கிழமை
12 46 47 65 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,189,503.20

சனிதா
திகதி 28.02.2025 வெற்றி வாரம் 4896
02 14 56 58 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,141,431.20
54612

சசிரி
632
28.02.2025
வெள்ளிக்கிழமை
01 21 22
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00


சீட்டிழுப்பு வாரம் 4447
சீட்டிழுப்பு திகதி 28.02.2025
தினம் வெள்ளிக்கிழமை
03 06 08 11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.15,331,613.60
194212

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 09 48 49 54 67
1911
28.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,906,640.40

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2561
சீட்டிழுப்பு திகதி : 2025.02.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,679,168.00
அட கோடிபதி ADA KOTIPATHI
09 25 37 43 F
208548

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## கோபாலபிள்ளை தெய்வேந்திரன்

மலர்வு : 1952.05.12 உதிர்வு : 2025.01.28

**தெய்வேந்திரன் என்னும் தேவமந்திரம்**

பூமியின் கதவு உடைபட்டது - எங்கள்
சாமி ஏனோ விடைபெற்று சந்தோஷம் எம் வானில்
தடைப்பட்டது கண்மடல்
நீர் நிரம்பி பெருக்கெடுத்தது
"அறம்" அதன் நிறம் மாறாது வாழ்ந்தீர்
பெற்றவர்கள் உற்றவர்கள் என்பதை தாண்டி ஊர்
உலகத்தால் மதிக்கப்பட்டவர்
தீங்கு என்பதை தினை அழவும் எண்ணாத
அதிமானுடன் அப்பழுக்கற்ற அற்புதன்
பெரிதாய் சொல்வதெனில்
உங்களைப்போல் வாழ்ந்தவர்கள் அரிது
இன்று ஊ(ப்)பார் போற்ற நாம் வாழ அடி எடுத்தும் கொடுத்தீரே.....
ஆமி வந்த போதும் அசராத சாமியே
இடம்பெயர்ந்து இடர் பட்டபோதெலாம் - எமை தாங்கினீர்
மரணம் மணத்த தருணங்களில் கூட
மலையென அருகிருந்து
அருள்பாலித்தீர் எதற்கும் அஞ்சாத துஞ்சாத அரனே
எமக்கான அரசே
ஏன் விடைபெற்றீர்..?
அப்பா....!
உங்களை நினைக்க நினைக்க மனதில் நூறு நினைவுகள்
தோன்றி மறைகிறது - உண்மையில் நீங்கள்
மறைந்துவிட்டதை மனம் ஏற்க மறுக்கிறது
உருகி உருகி எமை வளர்த்த வரமே - எங்கள்
கண்களில் அருவி பெருகி பெருகி வழிகிறது நெஞ்சு
நெருப்பில் எரிகிறது.
நீங்கள் ஓய்வு எடுத்து ஓரமாய் இருந்ததை கண்டதில்லை நாங்கள்
அடிமனதில் பாரம் எதுவெனில் எங்களுக்கு...
இளவேனில் காலம் வந்தபோது உங்களுக்கு
இலையுதிர் காலம்
வந்துவிட்டது ..... எங்கள்
காலதேவனை காலன் கொன்று விட்டான்
சொற்பனத்தில் நினைக்காத சோகத்தை சொந்தமாக்கிக் விட்டு
எங்கள் ஐயனே நீரும் போய்விட்டீர்
ஆறாத சோகத்துடன் கண்ணீர் குடம் உடைத்து
விடை தருகிறோம் ...
சென்று வாருங்கள் எங்கள் குல சாமியே
ஆத்மா அழிவில்லாதது......

(888)

குடும்பத்தினர்
புங்குடுதீவு - 12


## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)

"நாங்கள் உங்களோடு"



ஆர்க் . என் . கம்பனி

150, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ்.
070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி,
பரந்தன். 021 228 2020

(3540)

Hotline : 071 535 7799/ 071 535 7803

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## UK BUSINESS VISITOR VISA

லண்டனில் இடம்பெறும் LONDON TAMIL MARKET
வர்த்தக கண்காட்சியில்..
உங்கள் வியாபாரத்தினை
(பொருட்கள்/உள்ளூர் உற்பத்தி பொருட்கள் / சேவைகள்) நீங்களே நேரடியாக சென்று சர்வதேச சந்தையில் விளம்பரப்படுத்த



- விசா விண்ணப்பங்கள்
- STALL BOOKING
- HOTEL BOOKING
- RETURN AIR TICKET
- பயண ஒழுங்குகள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும்...

தொடர்புகளுக்கு
V2 TRAVELS 0777068777

(C2350)

## கனடாவில் PR வாய்ப்புக்கள்

கனடாவில் MARCH 31 இல் ஆரம்பமாகும் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியேறுவதற்குரிய கற்கைநெறி

CARE GIVER கற்கைநெறி
HOME SUPPORT WORKER & HOME CHILD CARE PROVIDER

கனடாவில் 50,000 க்கு மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள்

| | |
|---|---|
| கல்வி தகைமை | G.C.E O/L |
| கற்கை காலம் | 6 மாதங்கள் |
| கற்கைநேரம் | வார இறுதி நாட்கள் (சனி ஞாயிறு) |
| வயதெல்லை | 16 முதல் 50 வரை |
| கல்விக்கட்டணம் | 50,000/- |



NVQ/UK DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும் (C 2350)

CIMS 49A, CHAPPEL LANE JAFFNA 0777068777

## காணி விற்பனைக்குண்டு

நீர்வேலிச் சந்தியில்,
அருமையான சூழலில்
7 பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு.

074 38 25 961
076 91 97 566

(3509)

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில்
உள்ள பெரிய, நடுத்தர
மற்றும் சிறிய வகை பூச்சாடிகள்
மலிவு விலையில்
விற்பனைக்கு உண்டு.

074 148 6846

(3534)


## உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2025
## போட்டியிட விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரல்

நடைபெறவுள்ள உள்ளூரதிகார சபைகள் தேர்தலில் மாநகரசபை, நகர சபைகள், பிரதேசசபைகள் ஆகியனவற்றில் போட்டியிட விரும்புகின்ற தமிழ்த்தேசியத்தின் மீது பற்றுறுதியும், நல்லொழுக்கமும், சமூக சேவையில் ஈடுபாடும் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிபரங்களுடன் கூடிய விண்ணப்பங்களை greentamils5@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 077 556 5460 என்ற WhatsApp இலக்கத்துக்கு அல்லது தபால் மூலம் கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 09.03.2025


பொதுச் செயலாளர்
**தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்**
இல.191 (பழைய இல. 109), அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 556 5460

(3539)



## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 223/= | | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= | | |
| 1Kg றவை | - 285/= | | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | | |
| 1Kg கடலை | - 425/= | | |
| 10Kg விஜிதா அரிசி | - 2850/= | | |
| 1Kg சுக்குத்தீட்டல் | - 220/= | | Max 2Kg |
| 1Kg மல்லி | - 380/= | | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 985/= | ~~1050/=~~ | |
| 330g டிகிரிமாறி பிஸ்கட் | - 285/= | ~~330/=~~ | |
| 1 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ | |
| 1 மீன்ரின் | - 410/= | ~~700/=~~ | |

400g Anchor 1000/= ~~1050/=~~



129/= ~~165/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(889)

Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org